செ.கு.எண் : 194 நாள் : 26-05-2012

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 26.5.2012**

கிருஷ்ணா குடிநீர் திட்ட ஒப்பந்தத்தின்படி, ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து ஆண்டுதோறும் 12 டி.எம்.சி. அடி தண்ணீர் சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்காக வழங்கப்பட வேண்டும்.

சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, கண்டலேறு அணையிலிருந்து தண்ணீரை திறந்து விடுமாறு ஆந்திர மாநில முதலமைச்சருக்கு 24.3.2012 தேதியிட்ட கடிதம் மூலமாக நான் கேட்டுக் கொண்டேன். அதன் அடிப்படையில், கண்டலேறு அணையிலிருந்து 20.5.2012 முதல் வினாடிக்கு 500 கன அடி வீதம், தமிழக எல்லையில் 4 டி.எம்.சி. அடி தண்ணீர் வந்தடையும் வகையில் தொடர்ந்து நீர் வழங்கப்படும் என்று ஆந்திர மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஆந்திர மாநிலம், கண்டலேறு அணையிலிருந்து திறந்து விடப்பட்டுள்ள கிருஷ்ணா நதி நீர் 30.5.2012 அன்று தமிழக எல்லையை வந்தடையும்.

இதன் மூலம், இந்த ஆண்டு கோடைக் காலத்தில் சென்னை மாநகரின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.